திருக்கோலக்கா

திருப்பதிகங்கள்

தருமபுர ஆதீனம்.



தருமபுர ஆதீன மடாலயத் தோற்றம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்
உரு-வது மகாசந்நிதானம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணியதேசிக
ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

வெளியீடு எண் 100.

உ

குருபாதம்

திருச்சிற்றம்பலம்

திருக்கோலக்கா திருப்பதிகங்கள்

இது

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்

உரு-வது மகாசந்நிதானம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணியதேசிக ஞானசம்பந்த

பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்

ஆக்ஞைப்படி

வெளியிடப்பெற்றது.

தருமபுர ஆதீனம்

1946

பதிப்புரை

திருக்கயிலாயபரம்பரைத் தருமபுர ஆதீனம் உடு-வது மகாசந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் சமய வளர்ச்சி கருதி ஆற்றி வரும் பணிகள் பலவாகும். அவைகளுள் திருப்பதிகங்கள் கொண்ட 274 சிவஸ்தலங்களிலும் ஆதீனச் சார்பில் சிறப்பாக அபிஷேக ஆராதனைகள் செய்வித்து, அந்தந்தத் தலப்பதிகங்களையும் ஆங்காங்கு முறைப்படி ஓதுவித்து, ஆராதனை முடிவில் அத்தலப்பதிகங்கள் அடங்கிய புத்தகங்களை அன்பர்கட்கு வழங்குதலும் ஒன்றாகும். ஆதலின் அவர்கள் திருவுளப்பாங்கின்படியே திருக்கோலக்கா திருப்பதிகங்கள் என்னும் இந்நூல் ஆதீன வெளியீடாக வெளிவந்துள்ளது. அன்பர்கள் பதிகங்களைப் பாராயணஞ்செய்து ஸ்ரீ தாளபுரீசுவரர் திருவருளால் எல்லா நலங்களும் பெற்று உய்வார்களாக.

தலச்சிறப்பு

சோழநாட்டின்கண் விளங்கும் பாடல் பெற்ற நூற்றுத்தொண்ணூறு தலங்களுள் காவிரியின் வடபால் விளங்குவன அறுபத்து மூன்று. அவைகளுள் பதினைந்தாவதாக எண்ணப்பட்டு விளங்குவது திருக்கோலக்கா என்னும் இத்தலம். இது சீகாழி என்னும் திருத்தலத்திற்குத் தென்மேற்கே அரை கல் தொலைவில் இருக்கின்றது. இத்தலம் திருத்தாளமுடையார் கோயில் எனவும் வழங்கப்படுகின்றது. அம்மையாரளித்த திருமுலைப்பாலை உண்டு தோடுடைய செவியனெனும் திருப்பதிகம் அருளிய ஞானசம்பந்தப் பெருமான் அடுத்தபடியாகத் தரிசித்துத் திருப்பதிகம் ஓதியதலம் இதுவே. இறைவன் திருநாமம் **தாளபுரீசுவரர்.** இறைவி திருநாமம் **ஓசைகொடுத்தநாயகி.** ஆலயம் மிக அழகாக விளங்குகிறது. திருஞானசம்பந்தர் திருப்பதிகம் ஒன்றும், சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருப்பதிகம் ஒன்றும் ஆகிய இரண்டு திருப்பதிகங்கள் இத்தலத்திற்கு உள்ளன.

சம்பந்தசுவாமிகள் பொற்றாளம் பெற்றது

தொண்டர்மனங் களிசிறப்ப, அண்டர்குல மதிசயிப்ப, பவம்பெருக்கும் பரசமயப்புரை நெறிகள் பாழ்பட, சீகாழிப்பதியிலே அவதாரஞ் செய்தருளிய திருஞானசம்பந்தப் பிள்ளையார் மூன்றாவது வயதில் சிவஞானப் பால் உண்டு சுட்டிறந்த பொருளைச் சுட்டிக் காட்டியதோடு, உண்ணிறைந்து பொழிந் தெழுந்த உயர்ஞானத் திருமொழியால் 'தோடுடையசெவிய' னெனும் திருப்பதிகமும் பாடினார். அடியார்களோடு ஆலயத்தை யடைந்து தோணியப்பரைத் தரிசித்து, தமது திருமாளிகைக்கு எழுந்தருளினார்.

பின்னொருநாள் தோணியப்பரை வணங்கி, திருக்கோலக்காவுக்குச் சென்றார். ஆலயத்தை வலம்வந்து இறைவன் முன்னின்று துதிப் பாராய் 'மடையில்வாளை' என்று தொடங்கி திருக்கரங்களால் பண்ணிறைந்த தாளத்துக் குரிய மாத்திரையின் காலத்தை வரையறுத்து ஓதினார். ஓதுதலும் கருணைமூர்த்தியாகிய இறைவன் 'பிள்ளை இவ்வாறு கரங்களால் ஒற்றறுத்துப்பாடில் கரங்கள் வருந்துமே'

என்று எண்ணினர். என்னசெய்தார்? தன் திருநாமமாகிய திருவைந்தெழுத்தை எழுதிய செம்பொற்றாளங்கள் இரண்டு பிள்ளையாரது திருக்கரத்திலே வருமாறு அருள் பாலித்தார். தாளங்களும் கரங்களிலே வந்துற்றன. திருப்பாடலுக்கு ஏற்ப ஓசையுடன் ஒலித்தன. கண்டு அதிசயித்த பிள்ளையார் அவைகளைத் திருமுடியின்மீதுவைத்து வணங்கினர். 'உலங்கொள் வினைபோய் ஓங்கி வாழ்வரே' என்பதாகத் திருக்கடைக்காப்புச் சாத்திப் பதிகத்தை முடித்தார். இசையில் வல்ல தும்புரு நாரதர்கள் மலர் மழை பொழிந்தார்கள். மறைவாழ வந்தருளும் பிள்ளையாரும் பெருமான் அருளைப் போற்றி, தம் பதிக்கு எழுந்தருளினர்.

தலத்திருப்பதிகக் குறிப்பு

தலம்:- சோலைகளும் குளங்களும் வயல்களும் அழகு செய்கின்றன. சோலைகளில் குயில்கள் பயில்கின்றன; குரங்குகள் குதிக்கின்றன. நீலநிறவண்டுகள் குழலோசை போலும் ஓசையினை எழுப்புகின்றன. குளங்களில் பெண்கள் நீராடுகிறார்கள். அதனல்

வாளைமீன்கள் அஞ்சி வயல்மடைகளில் பாய்கின்றன. கொடிகள் கட்டித் திருவிழாக்கள் கொண்டாடப்படுகின்றன.

இறைவன்:- சடையும் பிறையும் சாம்பர் பூச்சுங் கீழுடையும் கொண்டவன்; பெண்ணொருபாகத்தான்; மழுவும் மானும் தாங்கிய திருக்கரமுடையான்; பூதப்படையான்; உலகமுய்ய நஞ்சுண்டான்; மும்மதில் எய்தான்; இலங்கையரசனை அடர்த்தான்; இயமனை உதைத்தான்; இத்தகையோன் கோலக்காவில் எழுந்தருளியிருக்கின்றான்.

பயன்:- அடிகள் பாதம் அடைந்தால் பிணிகள் நீங்கும்; பாவம் விலகும்; துன்பம் இல்லை.

சுந்தரர் திருப்பதிகம் 5-வது திருப்பாடலில் இறைவன் உலகவர் முன்பு வன்மைபேசி அடிமை ஓலைகாட்டிச் சுந்தரரைத் தடுத்தாட் கொண்ட வரலாறும், ஆறுவது திருப்பாடலில் மார்க்கண்டேயருக்காக மறலியை உதைத்த வரலாறும், எட்டாவது திருப்பாடலில் ஞானசம்பந்தப் பெருமானுக்குப் பொற்றாளமீந்த வரலாறும் கூறப்படுகின்றன.

உ

சிவமயம்

திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் திருப்பதிகம்

பண் - தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

மடையில் வாளை பாய மாதரார்
குடையும் பொய்கைக் கோலக் காவுளான்
சடையும் பிறையுஞ் சாம்பற் பூச்சுங்கீழ்
உடையுங் கொண்ட வுருவ மென்கொலோ. ௧

பெண்டான் பாக மாகப் பிறைச்சென்னி
கொண்டான் கோலக் காவு கோயிலாக்
கண்டான் பாதங் கையாற் கூப்பவே
உண்டா னஞ்சை யுலக முய்யவே. ௨

பூணற் பொறிகொ ளரவம் புன்சடை
கோணற் பிறையன் குழகன் கோலக்கா
மாணப் பாடி மறைவல் லானையே
பேணப் பறையும் பிணிக ளானவே. ௩

தழுக்கொள் பாவந் தளர வேண்டுவீர்
மழுக்கொள் செல்வன் மறிசே ரங்கையான்
குழுக்கொள் பூதப் படையான் கோலக்கா
இழுக்கா வண்ண மேத்தி வாழ்மினே. ௪

மயிலார் சாயல் மாதோர் பாகமா
எயிலார் சாய வெரித்த வெந்தைதன்
குயிலார் சோலைக் கோலக் காவையே
பயிலா நிற்கப் பறையும் பாவமே. ௫

வெடிகொள் வினையை வீட்ட வேண்டுவீர்
கடிகொள் கொன்றை கலந்த சென்னியான்
கொடிகொள் விழவார் கோலக் காவுளெம்
அடிகள் பாத மடைந்து வாழ்மினே. ௬

நிழலார் சோலை நீல வண்டினங்
குழலார் பண்செய் கோலக் காவுளான்
கழலான் மொய்த்த பாதங் கைகளால்
தொழலார் பக்கற் றுயர மில்லையே. ௭

எறியார் கடல்சூ ழிலங்கைக் கோன்றனை
முறியார் தடக்கை யடர்த்த மூர்த்திதன்
குறியார் பண்செய் கோலக் காவையே
நெறியாற் றொழுவார் வினைக ணீங்குமே. ௮

நாற்ற மலர்மே லயனு நாகத்தில்
ஆற்ற லணைமே லவனுங் காண்கிலாக்
கூற்ற முதைத்த குழகன் கோலக்கா
ஏற்றான் பாத மேத்தி வாழ்மினே. ௯

பெற்ற மாசு பிறக்குஞ் சமணரும்
உற்ற துவர்தோ யுருவி லாளருங்
குற்ற நெறியார் கொள்ளார் கோலக்காப்
பற்றிப் பரவப் பறையும் பாவமே. ௧௦

நலங்கொள் காழி ஞானசம் பந்தன்
குலங்கொள் கோலக் காவு ளானையே
வலங்கொள் பாடல் வல்ல வாய்மையார்
உலங்கொள் வினைபோ யோங்கி வாழ்வரே. கக

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்

சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருப்பதிகம்

பண் - தக்கேசி

திருச்சிற்றம்பலம்

புற்றில் வாளர வார்த்த பிரானைப்
 பூத நாதனைப் பாதமே தொழுவார்
பற்று வான்றுணை யெனக்கெளி வந்த
 பாவ நாசனை மேவரி யானை
முற்ற லார்திரி புரமொரு மூன்றும்
 பொன்ற வென்றிமால் வரையரி யம்பாக்
கொற்ற வில்லங்கை யேந்திய கோனைக்
 கோலக் காவினிற் கண்டுகொண் டேனே. ௧

அங்க மாறுமா மறையொரு நான்கும்
ஆய நம்பனை வேய்புரை தோளி
தங்கு மாதிரு வுருவுடை யானைத்
தழன்ம திசடை மேற்புனைந் தானை
வெங்க ணானையி னீருரி யானை
விண்ணு ளாரொடு மண்ணுளார் பரசுங்
கொங்கு லாம்பொழிற் குரவெறி கமழுங்
கோலக் காவினிற் கண்டுகொண் டேனே. ௨

பாட்ட கத்திசை யாகிநின் றானைப்
பத்தர் சித்தம் பரிவினி யானை
நாட்ட கத்தேவர் செய்கையு ளானை
நட்ட மாடியை நம்பெரு மானைக்
காட்ட கத்துறு புலியுரி யானைக்
கண்ணொர் மூன்றுடை யண்ணலை யடியேன்
கோட்ட கப்புன லார்செழுங் கழனிக்
கோலக் காவினிற் கண்டுகொண் டேனே. ௩

ஆத்த மென்றெனை யாளுகந் தானை
யமரர் நா தனைக் குமரனைப் பயந்த
வார்த்த யங்கிய முலைமட மானை
வைத்து வான்மிசைக் கங்கையைக் கரந்த
தீர்த்த னைச்சிவ னைச்செழுந் தேனைத்
தில்லை யம்பலத் துள்நிறைந் தாடுங்
கூத்த னைக்குரு மாமணி தன்னைக்
கோலக் காவினிற் கண்டுகொண் டேனே. ௪

அன்று வந்தெனை யகலிடத் தவர்முன்
ஆள தாகவென் றுவணங் காட்டி
நின்று வெண்ணெய்நல் லூர்மிசை யொளித்த
நித்தி லத்திரள் தொத்தினை முத்திக்
கொன்றி னன்றனை யும்பர் பிரானை
உயரும் வல்லர ணங்கெடச் சீறுங்
குன்ற வில்லியை மெல்லிய லுடனே
கோலக் காவினிற் கண்டுகொண் டேனே. ௫

காற்றுத் தீப்புன லாகிநின் றானைக்
கடவு ளைக்கொடு மால்விடை யானை
நீற்றுத் தீயுரு வாய்நிமிர்ந் தானை
நிரம்பு பல்கலை யின்பொரு ளாலே
போற்றித் தன்கழற் றொழுமவ னுயிரைப்
போக்கு வானுயிர் நீக்கிடத் தாளால்
கூற்றைத் தீங்குசெய் குரைகழ லானைக்
கோலக் காவினிற் கண்டுகொண் டேனே. ௬

அன்றயன்சிர மரிந்ததிற் பலிகொண்
டமரருக்கருள் வெளிப்படுத் தானைத்
துன்று பைங்கழ லிற்சிலம் பார்த்த
சோதி யைச்சுடர் போலொளி யானை
மின்ற யங்கிய இடைமட மங்கை
மேவு மீசனை வாசமா முடிமேல்
கொன்றை யஞ்சடைக் குழகனை யழகார்

நாளு மின்னிசை யாற்றமிழ் பரப்பு
ஞான சம்பந்த னுக்குல கவர்முன்
தாள மீந்தவன் பாடலுக் கிரங்குந்
தன்மை யாளனை யென்மனக் கருத்தை
ஆளும் பூதங்கள் பாடநின் றாடும்
அங்க ணன்றனை யெண்கண மிறைஞ்சுங்
கோளி லிப்பெருங் கோயி லுள்ளானைக்
கோலக் காவினிற் கண்டுகொண் டேனே. அ

அரக்க னாற்ற லழித்தவன் பாட்டுக்
கன்றி ரங்கிய வென்றியி னானைப்
பரக்கும் பாரளித் துண்டுகந் தவர்கள்
பரவி யும்பணி தற்கரி யானைச்
சிரக்கண் வாய்செவி மூக்குயர் காய
மாகித் தீவினை தீர்த்தவெம் மானைக்
குரக்கி னங்குதி கொண்டுகள் வயல்சூழ்
கோலக் காவினிற் கண்டுகொண் டேனே. கூ

கோட ரம்பயில் சடையுடைக் கரும்பைக்
கோலக் காவுளெம் மானைமெய்ம் மானப்
பாட ரங்குடி யடியவர் விரும்பப்
பயிலு நாவலா ரூரன்வன் றொண்டன்
நாடி ரங்கிமுன் னறியுமந் நெறியால்
நவின்ற பத்திவை விளம்பிய மாந்தர்
காட ரங்கென நடநவின் றான்பாற்
கதியு மெய்துவர் பதியவர்க் கதுவே. க0

14

திருச்சிற்றம்பலம்.

ஞானசம்பந்தம் பிரஸ், தருமபுரம், C. 500. 14—3—46.